1968 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வடிகால் வசதி திட்டங்கள் கைவிடப்பட்டதாக எப்போதும் அறிவிக்கப்படவில்லை. ஆங்காங்கு நடக்கும் மெயின்டனன்ஸ் செலவுகளிலேயே இதை முடித்து விடலாம். இந்த 64 வடிகால் திட்டங்களைப்பற்றி ஆய்வுக்குழு என்ன திட்டம் சமர்ப்பிக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வினா 52. திரு. என் காசிராமன் அவர்களுடைய வினாவை, திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் கேட்பார்கள்.

Damages due to fire in Vedaranyam taluk

* 52 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that quite a number of houses have been affected by fire in Vedaranyam taluk;

(b) if so, the reasons therefor;

(c) the extent of damages caused; and

(d) whether the Government have any immediate proposals to construct fire-proof houses for those who have been affected by the said fire?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம். வேதாரணியத்தில் 8—8—1967 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் ஓடுவேய்ந்த 14 வீடுகளும், 106 கூரை வீடுகளும் அழிந்து விட்டன.

(இ) அடுப்பிலிருந்து பறந்த தீப்பொறிகளினால் இது எதிர்பாராதவிதமாக ஏற்பட்டது.

(உ) தீயினால் ஏற்பட்ட இழப்பு ரூபாய் 5,49,705 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

(எ) இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இந்த தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகையாக எவ்வளவு கொடுக்கப்பட்டது என்று சொல்ல அமைச்சர் முன்வருவாரா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்காக 30 ரூபாயும், துணிமணிகளுக்காக 10 ரூபாயும் ஆக மொத்தம் 40 ரூபாய் முதலிலே கொடுக்கப்பட்டு வந்தது. புது அரசு வந்ததற்குப் பிறகு 1—7—1967-லிருந்து, வீடுகள் புதுப்பித்துக்கொள்ள 30 ரூபாய் என்றிருந்ததை 60 ரூபாயாகவும், துணிமணிகளுக்காக 10 ரூபாய் என்றிருந்ததை 20 ரூபாயாகவும் மொத்தம் 80 ரூபாயாக உயர்த்தி கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தவகையில் 118 குடும்பங்களுக்காக 9,440 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுமட்டுமல்லாமல்,

மீனவர் குடியிருப்புப் பகுதிகளில், மீன்பிடிக்கும் வலை, நைலான் வலை போன்றவை மீன்வளத் துறையிலிருந்து கொடுக்கப் பட்டிருகிறது.

திரு. எஸ். ராமலிங்கம்: தீப் பிடிக்காத வீடுகளைச் சென்னையில் கட்டிக் கொடுத்திருப்பதைப்போல அந்தப் பகுதியிலும் ஏன் கட்டிக்கொடுக்க முன்வரவில்லை என்று கேட்கிறேன்.

(விடை இல்லை.)

திரு. கே. விநாயகம் : சென்னையில் மாத்திரம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதே வினாவை . .

திரு. கே. விநாயகம்: இல்லை, நான் மாற்றிக் கேட்கிறேன். (சிரிப்பு) சென்னையில் உள்ளவர்களுக்கு மாத்திரம் நிதியைச் சேகரித்து தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் நல்லெண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறதே, அதுபோல இனியாகிலும் மற்ற பகுதியில் உள்ளவர்களுக்கும் ஏதாவது நிதியைச் சேகரம் செய்து தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டிக் கொடுக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நாட்டில் கூரை வீடுகளே இல்லாமல் தீப்பிடிக்காத வீடுகளாகவே ஆக்கவேண்டுமென்பது லட்சியமாக இருக்கலாம். கிராமப்புறங்களில் ஜனத்தொகை குறைவு, தீப்பிடிக்கும் சந்தர்ப்பங்களும் குறைவு. ஆனால் சென்னையில் ஜனநெருக்கமும் அதிகமாக இருக்கிறது, தீ விபத்து என்றால் ஏராளமான நஷ்டமும் ஏற்பட்டுவிடக்கூடும் என்கிற நிலை இருப்பதனால் உடனடியாகச் செய்யவேண்டியிருக்கிறது. இதனால் மற்ற இடங்களில் இந்த அரசாங்கம் அக்கறை கொள்ளவில்லை என்பதும் சரியாகாது. நிதி நிலைமைக்குத் தக்கபடி, பொது மக்களின் வள்ளல்தன்மையையும் பொறுத்து ஒவ்வொரு இடத்திலும் தீப்பிடிக்காத வீடுகளே கட்டப்படவேண்டும்.

திரு. இரா. அரங்கண்ணல்: பொதுவாகவே தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை ஏழை எளியவர்களின் வாழ்விலும் இந்த அரசாங்கம் அக்கறை கொண்டிருக்கிறது என்று சொன்னாலும், சென்னை மாநகரில் மட்டும் 650-க்கும் மேற்பட்ட குடிசைவாழ் பகுதிகள் இருக்கின்றன என்ற காரணத்தினால், அதுவும் சென்ற அரசாங்கத்தினால் இந்தக் குடிசைவாழ் பகுதிகள் புனரமைக்கப் படாமல் போய்விட்டன என்ற காரணத்தினால்தான் இங்கு தீப் பிடிக்காத வீடுகளை உடனடியாக கட்டித்தர இந்த அரசாங்கம் முன்வந்தது என்பது உண்மையா? இந்தத் துறையில் எடுக்கப் பட்டிருக்கிற நடவடிக்கைகள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் சொல்லலாம். சென்னை நகரத்தை முன் மாதிரியாக கொண்டுதான் அமைத்துக்காட்டுவதில் இந்த அரசாங்கம் மிகுந்த அக்கறையும், சிரத்தையும் கொண்டு இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.